ரிஜிஸ்டர் நெ. 1279

விலை பை 0-0-6

Dravidan

திராவிடன்

விலை அணா 8
ஞான சூரியன்
'திராவிடன் பதிப்பகம்'
சென்னை.

விலை 0-12-0
சாமிகளின் அடிமைகள்
(தமிழ் மொழி பெயர்ப்பு)
'திராவிடன்
பதிப்பகம்,
சென்னை

நாடோறும் வெளிவருவது

ஆசிரியர் திரு. சனக சங்கர கண்ணப்பர்

மலர் 14] சென்னை சுக்லஹு புரட்டாசிமீ 22உ 1929ஹு அக்டோபர்மீ 7உ திங்கட்கிழமை [இதழ் 14

பம்பாய் சட்டசபை

ஓட்டர் வரி குறைப்பு மசோதா

முதலாளி ஆதிக்கமா தொழிலாளி ஆதிக்கமா

ருசிகரமான விவாதம்

புனா, அக். 5

பம்பாய் நகரசபை ஓட்டுரிமை வரியை 10 ரூபாயிலிருந்து 5 ரூபாயாகக் குறைக்கவேண்டுமென்று ராவ்பகதூர் போல் கொண்டு வந்த மசோதா இன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மசோதாவைப் பிரேரேபித்து,

ராவ்பகதூர் போல்

பேசியதாவது:-இப்பொழுது பம்பாய் நகரவாசிகள் 11லக்ஷம் பேரில்190-184 பேரே நகரசபைத்தேர்தலில் ஓட் டுக்கொடுக்க உரிமை பெற்றிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்குப் பிரதிநிதிகளே இல்லை. 52 ஆயிரம்ஜனத்தொகை கொண்ட பார்சிகளுக்கு இப்பொழுது நகரசபையில் 19 பிரதிநிதிகள் இருக்கிறார்கள். நகரசபைஅபிப்பிராயம் இப்பொழுது சட்டசபையார் ... நகரசபையில் ஒரு நாள் ... ரத்து செய்து வருகிறார்கள். முதலாளிப்பிரதிநிதிகளான,

திரு. ரஹிமத்துல்லாவும்

மூர்ஜாபனும் அந்த மசோதாவை எதிர்த்தார்கள். ஓட்டுரிமை வரியைக் குறைக்கும் முயற்சி ஒரு வருஷவார் தமாஷ் என்று அவர்கள் அபிப்பிராயப் பட்டார்கள். ஓட்டுரிமை வரி 20 ரூபாயாக இருந்ததை 10 ரூபாயாகக் குறைத்ததினாலேயே நகரசபையார் ஒரு நாள் செய்த தீர்மானத்தைமறுநாள் ரத்துசெய்து வருவதாக திரு. ரஹிமத்துல்லா கூறினார்

திரு. மூர்ஜாபன்

பேசியதாவது:-இது ஒரு வருஷவாரி தமாஷா அல்லது. மூன்று மாதத்திற்கு ஒரு முறை நடைபெறும் தமாஷா. ஓட்டுரிமை வரியைக் குறைப்பதினால் முதலாளிகளுக்குத் தான் அனுகூலம் வாக்காளர் தொகை அதிகமாகும்போது முதலாளிகள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு சௌகரியமும் அதிகமாகிறது.

திரு. நூராபாய் தேசாய்

பேசியதாவது:-ஏழைகள் குறைகளை கவனிக்கக்கூடிய மெம்பர்கள் நகரசபைக்கு வரவேண்டியதிருப்பதால் ஓட்டுரிமை வரியைக் குறைக்கவேண்டியது அவசியமே.

திரு. சுவாமி நாராயணன்

மசோதாவை ஆதரித்துப் பேசியதாவது:-போல்ஷவிக் கொள்கைகள் பம்பாயில் பரவி விட்டதாகச் சொல்லப்படுகிறது. தொழிலாளர் முன்னேற்ற வழிகளை யெல்லாம் முதலாளிகளும் நகரசபையாரும் அழித்து விட்டதினாலேயே போல்ஷவிக் கொள்கைகள் பரவத் தொடங்கியிருக்கிறது.

திரு வசந்தராவ் தபோர்கர்

பேசியதாவது:-ராவ்பகதூர் போல் தொழிலாளர் தலைவர் என்று சொல்லிக்கொண்டாலும், தொழிலாளர் அவரைத் தலைவரென்று ஒப்புக்கொள்ளவே இல்லை.

கடைசியாக மசோதா ஓட்டுக்கு விடப்பட்டபோது சாதகமாக 27 பேரும் பாதகமாக 26 பேரும் வாக்களித்ததினால் மசோதா முதன் முறை வாசித்து நிறைவேறியது.

இரண்டாம் முறை வாசிக்கப்பட்டபோது சாதகமாக 29 பேரும் பாதகமாக 28 பேரும் வாக்குக்கொடுக்கப்பட்டு நிறைவேறியது.

சர்க்கார் ... ஷிலைமை வகித்தார்கள்.

இக்கட்ட மசோதா மூன்றும் முறை வாசி... த்துக் கொள்ளப்படும்.

ப்ரீபிரஸ்

சர். சாமுவெல் வில்சன் அறிக்கை

பிரிட்டிஷ் சர்க்கார் விஞ்ஞாபனம்

சர். சாமுவெல் வில்சன் அறிக்கையைப்பற்றி பிரிட்டிஷ் சர்க்கார் சார்பாக குடியேற்ற நாட்டுஉதவி மந்திரி வெளியிட்டிருக்கும் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-சர். சாமுவெல்வில்சன் அறிக்கையினால் ஹில்டன் யங் ரிப்போர்ட்டை பிரிட்டிஷ் சர்க்கார் அலக்ஷியம் செய்துவிட்டதாக ஒருவரும்எண்ணக்கூடாது. ஸர். சாமுவெல் வில்சன் பொர்சுகளைத்தழுவி, ஹில்டன்யங் அறிக்கை பரிசீலனை செய்யப்படும். முக்கியமாக ஹில்டன் யங் யாதாவதையே சர்க்கார் அதிகமாகப் பின்பற்றுவார்கள்.

அ. பிரஸ்.

நிலக்கரி வர்த்தகரைப் பயமுறுத்தியவரின் கதி

பொது உடைமைப் பிரசாரத்திற்குப் பணம் கேட்டல்

கல்கத்தா, அக்டோபர், 5

திரு. வி. பி. பானர்ஜி என்னும் நிலக்கரி வர்த்தகரைப் பொது உடைமை கட்சிப் பிரசாரத்திற்குப் பணம் அளிக்குமாறு பயமுறுத்தியதற்காக பட்ராலக் என்பவரொருவர் வ... செய்யப்பட்டனரென்று இங்கிலீஷ்மென் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வியாழக்கிழமை காலை அம்மனிதர் திரு. பானர்ஜியைப்பேட்டிகண்டு தாம் ஒருபொது உடமைக்கட்சிக்காரரென்றும் திரு. பானர்ஜியினிடம் அவசியமானதற்குமேல் பொருளிருப்பதால், கட்சிக்கு நிரம்பிய பொருளளிக்கவேண்டுமென்றும் கேட்டனராம். திரு. பானர்ஜி அதற்கு மறுக்கவும் அம்மனிதர் கோரமான முறையில் பயமுறுத்தத் தலைப்பட்டனராம். போலீசார் அழைக்கப்பட்டு, அம்மனிதர் கைது செய்யப்பட்டனர்.

அ. பிரஸ்.

பெரிய ஆகாயக் கப்பல்

பரீட்சை பார்க்க ஏற்பாடு

ரக்பி, அக், 5

இங்கிலாந்தில் செய்யப்பட்டுள்ள பெரிய ஆகாயக் கப்பல் ஆர். 101 ஐ ஆகாயத்தில் செலுத்திப் பரீட்சை பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. இதுபற்றி பெருந்திரளான மோட்டார் வண்டிகள் நிற்பதற்கும் சனங்கள் நின்று வேடிக்கை பார்ப்பதற்கும் சவுகரியம் அளிக்க அரசாங்கத்தார் தக்க முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகின்றனர். ஆகாயக் கப்பலை பயணத்திற்கு ஒத்தப்படுத்துவதற்கே இரண்டு நாட்கள் செல்லுமாம்.

இங்கிலாந்தில் மணி நேர மாற்றம்

காலை 3 மணி 2 மணியாக மாறும்

ரக்பி, அக், 5

கோடைகால மணிநேரம் இன்றுடன் முடிவடைகின்றதென்றும், க்ரீனிச் மணி நேரமே இனி அநுசரிக்கப்பட வேண்டும் என்றும், கோடை கால மணி நேரக்கணக்கின்படி இன்று காலையில் காணப்படும் 3 மணி க்ரீனிச் கணக்குப் படி 2 மணியாக மாற்றப்படும் என்றும் அரசாங்கம் அறிக்கையிட்டுள்ளது.

வியாபாரத்திற்கழகு
—விளம்பரம் செய்தல்

உவில் எழுதும் முறை

எஸ். வி. பி. என்பார் "ஸ்டேட்ஸ்மான்" பத்திரிகையில் எழுதியிருப்பதாவது:—ஒருவர் தன் மரணத்துக்குப் பின் தன் சொத்துக்களுக்கு வாரிசு இன்னாரென்று எழுதிவைக்கும் சாசனத்துக்கே "உவில்" என்று பெயர்.

அந்த உவில், சட்டப்படி செல்லுபடியாக வேண்டுமானால் எழுதுபவர் சில சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு உவில் எழுதவேண்டும்.

எனவே, 'உவில்' எழுதும் விஷயத்தில் ஜனங்கள் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்றும். வக்கீல்களும் கூட உவில் எழுதும் விஷயத்தில் பல தப்புகள் செய்துவிடுகிறார்கள் என்று ஒரு புகழ்பெற்ற ஆங்கில நீதிபதி முறையிட்டிருக்கிறார்.

சட்டப்படி மேஜரானவர்களுக்கும் சித்த சுவாதீன முடையவர்களுக்கும் தான் எழுதும் 'உவில்' பத்திரத்தின் கருத்துக்களை யெல்லாம் செவ்வனே உணர சக்தியுடையவர்களுக்கும் மட்டுமே 'உவில்' எழுத சட்டப்படி உரிமை யுண்டு ...

பொதுவாக 'உவில்' ... எழுதுகிறவர் கையெழுத்துப் போட்டுத் தீர வேண்டும். கையெழுத்துப் போடமுடியாவிட்டால் விரல் அடையாளமாவது போடவேண்டும். அல்லது உவில் எழுதுகிறவர் விருப்பப்படி, உவில் எழுதுகிறவர் முன்னிலையில் வேறு யாராவது ஒருவர் கையெழுத்துப் போடவும் செய்யலாம். அந்த உவில் அவலுக்குக் கொண்டு வரப்படும்கருத்துடன் எழுதப்பட்டதென்று ருசுப்படுத்தும் முறையில் கையெழுத்துப் போடப்படவேண்டும் அதாவது உவில்லின் கடைசிப் பாகத்தில் கையெழுத்தோ, விரல் அடையாளமோ போடப்படவேண்டும் உவில் பத்திரம், ஒன்றுக்கு மேற்பட்ட காகிதங்களில் எழுதப்பட்டிருந்தால் ஒவ்வொரு காகிதத்திலும் கையெழுத்தோ, விரல் அடையாளமோ போடப்படவேண்டும்.

இரண்டாவது, அதில் சாட்சிகளும் கையெழுத்துப் போடவேண்டும். சாட்சியம் செய்யப்படாத உவில் செல்லுபடியாகாது. குறைந்தபட்சம் இரண்டு சாட்சிகள் இருக்கவேண்டும். ஒவ்வொருசாட்சியும் உவில் எழுதுகிறவர் கையெழுத்துப் போடுவதையோ விரலடையாளம்வைப்பதையோ உவில்எழுதுகிறவர் விருப்பப்படி வேறொருவர் கையெழுதது போடுவதை யோ நேரில் பார்த்தவராக இருக்கவேண்டும். மேலும் ஒவ்வொருசாட்சியும் உவில் எழுதுகிறவர் முன்னிலையில் உவில்லில் கையெழுத்துப் போடவேண்டும். எல்லா சாட்சிகளும் ஏககாலத்தில் கையெழுத்துப்போடவேண்டும். என்று கட்டாயமில்லை. இது இந்திய சட்டமுறை. இங்கிலீஷ் லாப்படி எல்லா சாட்சிகளும் ஏககாலத்தில் உவில் எழுதுகிறவர் முன்னிலையில் கையெழுத்துப்போடவேண்டும்.

மூன்றாவது, உவில்லில் குறிப்பிடப்பட்டிருக்கும் சொத்துக்களை தம்மிஷ்டப்படி சட்டவரம்புக்குட்பட்டு கையாட்சிசெய்ய உவில் எழுதுகிறவருக்குப் பூரண உரிமை யிருக்கவேண்டும். ஆகவே ஏதாவது ஒரு குற்றம் நடைபெறுவதற்கு உதவியாக யாராவது ஒரு உவில் மூலம் சொத்துக்களை விற்றால் அது செல்லுபடியாகாது. அந்தச்சொத்து வாரிசுரிமைச் சட்டத்தின்படி யாருக்குப்போகவேண்டுமோ அவர்களுக்கே போகும்,

ஏனைய வகைகளில் சட்டப்படி செல்லக்கூடிய உவில்கள், உவில் எழுதினவர் சித்தஸ்வாதீன மற்றவர் என்று காரணங் கூறி சர்வ சாதாரணமாக எதிர்க்கப்பட்டு வருகிறது. ஆனால், அதைருசுப்படுத்தும் பொறுப்பு முழுதும் உவில்லை ஆட்சேபிப்பவருக்கேஆகும். உவில்எழுதினவர், எழுதும் காலத்தில் சித்தஸ்வாதீன ... என்று ... ஆட்சேபிப்பவர் ருசுப்படுத்தவிடினும், உவில் சட்டப்படி செல்லத் தக்கதென்று கோர்ட்டார் ஒப்புக்கொண்டுவிடுவார்கள்.

பைத்தியக்காரர்களும் கூடசித்தஸ்வாதீனமாயிருக்கும் காலத்தில் உவில் எழுதலாம். பலவீனர்களும் சித்தஸ்வாதீன மற்றவர்களும் பைத்தியக்காரர்களும் உவில் எழுத உரிமையுடையவர்களே. உதாரணமாக ஒரு திருஷ்டாந்தம் கூறுகிறேன். வெகுகாலம் இந்தியாவில் வாழ்ந்தவரும், சில சமயம் ஹிந்து வென்றும் சில சமயம் முஸ்லீம் என்றும்சொல்லிக் கொள்பவருமான ஒரு ஆங்கிலேயர் தம் சொத்தில் பெரும் பகுதியை பலதருமங்களுக்குவிட்ட பிறகு மீதமுள்ளதை, கான்ஸ்டாண்டிநோபிள் நகரத்திலுள்ள ஏழை எளியவர்களின் உபயோகத்துக்காகவும், அங்கேஒரு தீபஸ்தம்பம் கட்டி அதில் தன்பெயரை எழுதி வாடா விளக்குப் போடுவதற்காகவும் திருக்கிராஜப் பிரதிநிதி பேருக்கு உவில் எழுதி வைத்தார். இதைப்பற்றி ஆட்சேபம் உண்டானபோது கோர்ட்டார் அந்த உவில்லை ரத்துசெய்த விட்டார்கள். கடைசியில் பிரிவு கௌன்சிலில் உவில் செல்லுபடியாகக் கூடியதென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

உவில் செல்லுபடியாக வேண்டுமானால் ஒரு டாக்டரையும் ஒரு வக்கீலையும் சாட்சிகளாக வைத்துக் கொள்வது நல்லது. அன்றியும் உவில் பத்திரம் தெளிவான நடையில் எழுதப்பட வேண்டும்.

இரண்டர்த்தமோ தப்பர்த்தமோகொடுக்கக்கூடிய பதங்களை உவில்லில் வழங்கக் கூடாது. ஒரு முறை எழுதிய உவில்லில் எக்காரணம் கொண்டும் திருத்தங்கள் செய்யக்கூடாது. உவில்லைத் திருத்தம் செய்யத் தேவையுண்டானால் அதை மாற்றி எழுதுவதே நல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உவில்கள் எழு... பட்டிருந்தால் கடைசி உவில்லே செல்... உவில்பத்திரங்களை அமுலாக்குவதற்கு ... வர ஒன்றிரண்டு எக்ஸிக்யூட்டர்களை நியமனம் செய்வதும் நல்ல முறை... ஆனால், இந்த ஏற்பாடு கட்டாயமான தல்ல.

உவில்லுக்கு ஸ்டாம்பு கட்டணம் ... வும் கிடையாது இஷ்டமிருந்தால் உவில்லை ரிஜிஸ்டர் செய்யலாம். உவில் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டுமென்று கட்டாயமில்லை.

பப் (Pfaff) தையல் மிஷீன்கள்

(1862-ல் ஸ்தாபிக்கப்பட்டது.)

சோல் ஏஜெண்டுகள் :—

பெல் அண்டு கோ., லிமிட்டெட்,

பம்பாய்—சென்னை.

கர்னக் ரோட், பம்பாய் 2.

1/186, மவுண்ட்ரோட், சென்னை.

தந்திவிலாசம்:

பப் ("Pfaff") பம்பாய். ஸுமெஷீன் ("Sewmachine") சென்னை.

ஏஜென்சிகளும்—கிளைகளும்:-குண்டக்கல், பெல்லாரி, அனந்தபூர், கர்னூல், பெஜவாடா, செங்கற்பட்டு.

சமீபத்தில் கிளைகள் ஸ்தாபிக்கப்படும் இடங்கள்:—ஸ்ரீவில்லிபுத்தூர், வேலூர், திருப்பதி, காக்கிநாடா, நிதாதவோலு.

கிளைகள் இல்லாத ஜில்லாக்களிலெல்லாம் ஏஜெண்டுகள் தேவை.

வேண்டும் விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதுக:-

பெல் அண்டு கோ., லிமிட்டெட்,

(651-எ) மதராஸ்.

சென்னை ரேவு மார்க்கட்

(7—10—29)

ராத்தல்		ரூ.	அ.	பை
பச்சரிசி:—நெல்லூர் 44படி		13	0	9
பெஜவாடா "நில்லி"	164	15	12	9
புழுங்கல் அரிசி:—				
மிஷின் ரா.	164	12	12	9
குருணை:—				
ரங்கூன் குருணை ஆலீஸ்				
ரகம் எ. 1.	210.	15	0	9
ரங்கூன் குருணை எ. 2	,,	13	12	9
ரங்கூன் குருணை எ. 3	,,	13	0	9
ரங்கூன் குருணை பி. 1	,,	14	8	9
ரங்கூன் குருணை பி. 2	,,	13	8	9
ரங்கூன் குருணை பி. 3	,,	12	8	9
ரங்கூன் குருணை சி. 1	,,	13	0	9
ரங்கூன் குருணை சி. 2	,,	12	0	9
ரங்கூன் குருணை சி. 3	,,	11	12	9
சைகோன் கெ. 1	216	15	8	9
சைகோன் (கெ. 1-ம் 9 கலப்பு), 'கெ. 2-ம் ரூ. 989 முதல்	ரூ.	13	0	9
கோதுமை:—				
கண்ட்வா	,,	17	0	9
தவதானியங்கள்:—				
பட்டாணி (சூரா)	205	17	6	9
பட்டாணி (சூரா)	164	13	12	9
பட்டாணி [கல்கத்தா]	205	16	12	9
துவரை (சூரா)	205	15	0	9
துவரம் பருப்பு (கல்கத்தா)	205 ,,	19	12	9
துவரம்பருப்பு (கான்பூர்)		20	8	9
உளுந்து (ராஜமான்கா)	225	18	0	9
உளுந்து (ராய்பூர்)	,,	17	12	9
பச்சைப்பயிர் (விக்ரிமாத்)	205	17	4	9
பச்சைப்பயிர் (பம்பாய்)	200	13	8	9
(சிங்கப்பூர்)	200	15	0	9
கடலை (பஞ்சாப்)	205	17	4	9
கடலை (இந்துஸ்தான்)	200	16	4	9
கடலை [பஞ்சாப்]	205	17	0	9
கடலைப் பருப்பு (ரங்கூன்)	195	18	4	9
கடலைப் பருப்பு (காராச்சி)	205	21	0	9

பொன் வெள்ளி வகையரு

சவரன் 1-க்கு	ரூ 13—7—10
சிமைகட்டி தங்கம் தோலா 1-க்கு	ரூ 21—13—0
"மின்ட்" தங்கம் தோலா 1-க்கு	ரூ. 21—8—9
கட்டி வெள்ளி	ரூ. 54—0—0

11-வது பார்ப்பனரல்லாதார் மகாநாடு

நெல்லூரில் மகாபெரும் கூட்டம்

ராவ்பகதூர் பி. முனிசாமி நாயுடு தலைவராய்த் தெரிந்தெடுக்கப்பட்டார்

பார்ப்பனர் கூடவே கூடாது

முதல்நாள் நடவடிக்கை

பதினோராம் பார்ப்பனரல்லாதார் மகாநாடு சனிக்கிழமை 5—10—29 ல் மத்தியானம் இரண்டுமணிக்குக் கூடிற்று. மகாநாட்டிற்கு மத்தியானம் வரை வெளியூர்களிலிருந்து பிரதிநிதிகள் வந்து கொண்டே இருந்தனர். மகாநாட்டுக் கொட்டகை ஹாலில் எல்லா வாசல்களிலும் வெளியிலும் மகாதோரணங்களால் எழில் ததும்ப அலங்கரிக்கப்பட்டிருந்தது. வழியில் எல்லாம் சுமான் வளைவுகள் போடப்பட்டிருந்தன. அவைகளில் "தென்னிந்திய நலவுரிமைச்சங்கம் நீடூழி வாழ்க", "மந்திரிகள் வருக", "மகாநாட்டுத்தலைவரே வருக" என்று எழுதப்பட்டிருந்தன. பிரதிநிதிகளும் மகாநாட்டை பார்க்கவந்தவர்களுமாக சுமார் 3000 பேர்கள் வந்திருந்தனர். மகாநாடு கூடுவதற்குச் சுமார் இரண்டுமணி நேரத்திற்கு முன்பே ஜனங்கள் ஹாலில் கூடிவிட்டனர். திருவாளர்கள் ஏ. ராமசாமி முதலியார் ஈ. வே. ராமசாமியார், பி. டி. ராஜன், டாக்டர் நடேசன், வெங்கடகிரிகுமார ராஜா முதலிய தலைவர்களும் மந்திரிமார்களும் வந்தபோது அவர்களை கரகோஷத்துடனும் ஜே கோஷத்துடனும் வரவேற்கப்பட்டனர். மந்திரிமார்கட்கு மாலைகள் போடப்பட்டன. மகாநாட்டுத் தலைவர் சுமார் இரண்டு மணிக்கெல்லாம் வந்தார். அவர் வந்ததும் பாண்டு வாத்தியங்கள் முழங்கின. அவருக்கு மாலை போட்டு பெரும் கரகோஷத்திற்கிடையே உள்ளே அழைத்துக் கொண்டு வரப்பட்டது, தலைவர் வந்து உட்கார்ந்ததும் சில பெண்கள் தெலுங்கில் வாழ்த்துப்பாக்கள் பாடினர்.

முனிசிபல் பத்திரம்

அப்பால் இரண்டு மந்திரிகட்கும் மகாநாட்டுத்தலைவருக்கும் சென்னைகார்ப்பொரேஷன் தலைவர் திரு. ஏ. ராமசாமி முதலியாருக்கும் நெல்லூர் முனிசிபாலிட்டியார் உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்தனர்.

பத்திரங்கட்குப் பதில்

ராவ்பகதூர் முனிசாமி நாயுடு அவர்கள் பதிலளித்தபோது இச்சந்தர்ப்பத்தில் தன்னை கௌரவப்படுத்தியதற்காகவும்; பார்ப்பனரல்லா சமூகத்திற்குத்தாம் பாடுபடுவதைப்பற்றி வெகுவாய் புகழ்ந்து கூறியதற்காகவும் வந்தனமளிப்பதாயும், தாம் எப்பொழுதும் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கும் நாட்டிற்கும் தொண்டு புரிவதில் எக்காலத்திலும் பின்வாங்க மாட்டேனென கூறுதி கூறுவதாயும் கூறினர்.

கனம் டாக்டர் சுப்பராயன் இரண்டாம் முறை நெல்லூர் முனிசிபாலிட்டியார் தன்னை கௌரவித்ததிற்காக வந்தனமளிப்பதாயும், அதில் குறிப்பிட்டிருக்கும் தண்ணீர் சப்ளை தனது சுண்பரும் கூட்டாளியுமான கனம் மூத்தையா முதலியாரை சார்ந்தது என்றும், அவைகளை கவனித்து வேண்டியதை செய்யுமாறு தன்னால் இயன்றவரை தூண்டுவதாகவும் கூறினர்.

கனம் முத்தையா ஓரே ஆண்டில் இரு முறை தன்னை கௌரவித்ததிற்காக தாம் வந்தனமளிப்பதாயும், முதல் மந்திரியார் பொறுப்பை தம் தலைமேல் போட்டுவிட்டார் என்றும் அதை ஏற்றுக்கொண்டு தம்மால் இயன்றதை செய்வதாயும், எடுத்துக்கூறினர்.

திரு. ஏ. ராமசாமி முதலியார், ராவ் பகதூர் முனிசாமி நாயுடு இங்கருக்குஇன் றும்மானேயும்தன்னதபோல்கார் என்றும், அவருக்கும் இரண்டு மந்திரிகட்கும் உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுத்தது ஒப்புத் தகுந்ததென்றும், தனக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தது தன்னை சங்கடமான நிலைமையில் வைத்துள்ளது என்றும், சென்னை கார்ப்பொரேசன் தலைவர் என்னும் தன்மையில் தனக்கு அளிக்கப்பட்ட இக்கௌரவம் தன்மூலம் தனது சகோதரர்கட்கு அளித்துள்ள கௌரவமென்றே சொன்னதாயும், அவர்களில் பலர் இங்கு வந்துள்ளாரென்றும், பத்திரத்தில் அவர்கள் பார்ப்பனரல்லாதார்களுக்குத் தாம் தொண்டுசெய்துவருவதாய் புகழ்ந்துள்ளது அவர்களின் அன்புத்தன்மையைக்காட்டுவதாயும், தாம் சென்னை கார்ப்பொரேஷனை நடத்திவரும் முறை பின்பற்றத்தகுந்ததென அவர்கள் கூறியுள்ளார்களென்றும், ஆனால்சென்னைகார்ப்பொரேசனில் சில சகோதர மெம்பர்கள் நடக்கின்றபடி நடக்க வேண்டாமென கேட்டுக்கொள்வதாயும் கூறினர்.

மகாநாடு ஆரம்பம்

பத்திரங்கட்குப் பதிலளிக்கப்பட்டதும் வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு. [illegible] பி. ராமச்சந்திர ரெட்டி [illegible] வரவேற்பு பேருரை நிகழ்த்தினர்.

தலைவர் தேர்தல்

[illegible] வரவேற்புக் கழகத் தலைவர் [illegible] பி. ராமச்சந்திர ரெட்டியாரின் [illegible] இணங்கி திரு. வி. சக்கரைச் செட்டியார் அவர்கள் மகாநாட்டிற்கு ராவ்பகதூர் பி. முனிசாமி நாயுடு அவர்களைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொள்வதாகப் பிரேரேபித்துப் பேசுகையில், "தலைவர் திரு. முனிசாமி நாயுடுவைக் குறித்து உங்களுக்கு அறிமுகம் செய்துவைக்கவேண்டிய அவசியமே யில்லை. அவரை வரவேற்புக் கமிட்டியார் முன்பே மகாநாட்டுத் தலைவராய்த் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். எனினும் இன்று அவ்வாறு தேர்ந்தெடுத்ததைக் குறித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்வது விசையாகாதெனக் கருதுகிறேன். அவர் பார்ப்பனரல்லாத இயக்கத்தில் குன்றா ஊக்கத்துடனும் விசுவாசத்துடனும் உழைத்து வந்திருப்பவர். தற்போதைய நிலைமையைப் போன்ற மகாநாட்டுக்குத்தலைமை வகிப்பதற்கு அவர் தான் முற்றும் பொருத்தமானவரென்று ஒவ்வொரு பிரதிநிதிகளின் மனதில் தோன்றியிருக்கின்றதென்பதில் சந்தேகமில்லை (கரகோஷம்) பார்ப்பனரல்லாத கட்சியில் ஏதோ அபிப்பிராய பேதங்களும் பிளவுகளுமிருந்த போதிலும் அபிப்பிராய பேதங்களை ஒழித்து ஒற்றுமைப்படுத்தி மகாநாட்டை வெற்றியுடன் நடத்திவைப்பதற்கு அவர் பலவாற்றானும் தகுதியுடையவர். அன்றியும் அவர் பார்ப்பனரல்லாத தலைவர்களுள் எல்லாம் மிகத்தெளிவான நோக்கமும் சமரசப்போக்கு முடையவர். (கேளுங்கள்) இம்மகாநாட்டில் இந்நாட்டு மக்களுள் எல்லாபிரிவினருக்கும் வகுப்புவாரி நீதி வழங்குவதுடன் சமத்துவமான சந்தர்ப்பமளிக்கும் முறைகளைக் குறித்தும் நன்காலோசிக்கப்படுமாதலால் நெல்லூர் மகாநாட்டை ஒப்பற்றதெனச் சொல்லவேண்டும். இத்தகைய மகாநாட்டுக்கு திரு. முனுசாமி நாயுடுவைப் போன்ற ஒருவர் தலைவராய் வாய்த்ததற்கு என் மனமுவந்த சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. படேட்டி வெங்கடராமய்யா அவர்கள் பிரேரணையை ஆமோதித்து தெலுங்கில் பேசுகையில் திரு முனிசாமி நாயுடுகாரு என்ன கஷ்டம் வந்த போதிலும் விஸ்வாசத்துடன் இன்றுவரை பார்ப்பனரல்லாத கட்சியில் சேர்ந்துழைத்துவந்த முக்கிய தலைவர்களுள் ஒருவர். இம்மகாநாட்டை வெற்றியுடன் நடத்திவைப்பதற்கு அவர்தான் தகுதியுடையவர் என்பதை நன்குணர்ந்து வரவேற்புக் கமிட்டியார் அவரைத் தேர்ந்தெடுத்ததற்கு மிகுதியும் நன்றி பாராட்ட வேண்டும். அவருடைய குணாதிசயங்களைக் குறித்து நெல்லூர் முனிசிபாலிட்டியார் வாசித்துக் கொடுத்த பத்திரத்தில் நன்கு விளக்கியிருக்கின்றனர். மகாநாட்டுத் தலைவராயிருந்து அவர் இதனை ஒப்பற்ற வெற்றியுடன் நடத்திவைப்பாரென்ற முழு நம்பிக்கையுடன் நான் பிரேரணையை ஆமோதிக்கின்றேன் எனக் கூறினர்.

ஈ. வெ. ராமசாமி

திரு. ஈ. வெ. ராமசாமியவர்கள் பெருத்த கரகோஷத்தினிடையே அடுத்தபடியாக பிரேரணையை ஆதரித்துப் பேசியதாவது:—திரு முனிசாமி நாயுடு அவர்கள் இம்மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கவேண்டுமெனப் பிரேரேபித்து வரவேற்புக் கமிட்டியார் ஏற்றுக் கொண்டு இரண்டுமாதங்களுக்கு அதிகமாகின்றது. அவ்வாறிருக்க இன்று பிரேரேபிப்பதும் அதனை ஆமோதிப்பதுமான நிர்ப்பந்த மிருப்பதாகத் தெரியவில்லை (நகைப்பு) ஆனால், தலைவரைக் குறித்து பொது ஜனங்களுக்கு தெரியப்படுத்துவதான இம்மாதிரி முறை எங்கும் அநுசரிக்கப்பட்டு வருகின்றது. ஆந்திரநாட்டில் கூடும் இம்முக்கிய மகாநாட்டுக்கு ஆந்திர தேசத்தில் முக்கிய தலைவராய் தலைசிறந்து விளங்கும் இவர் தலைமை வகிப்பதால் இவரைக் குறித்து அறிமுகம்செய்து வைக்கும் போக்கில் ஒன்றும் சொல்ல வேண்டியது அவசியமில்லையாயினும், தமிழ்நாட்டிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகள் வந்திருப்பதால் அவர்களுக்காகச் சில வார்த்தைகள் சொல்லவேண்டியது அவசியமாயிருக்கின்றது. பிராமணரல்லாதார் இயக்கம் தோன்றியதுமுதல் திரு. முனிசாமி நாயுடு பேருக்கத்துடன் இவ்வியக்கத்தில் சேர்ந்துழைத்து வந்திருப்பவர். நமது காலஞ்சென்ற தலைவர் பானகலரசரின் வலக்கைபோல இருந்துவந்தவர். இவர் பார்ப்பனரல்லாத கட்சியில் எவ்வித அபிப்பிராய பேதங் கொண்டிருந்த போதிலும், அதனை ஒன்றும் ஒளியாது தைரியமாயும் தாராளமாயும் வெளியிட்டு விவாதிக்கும் இயல்புடையவர். தலைவராயிருப்பவருக்கு வேண்டிய முக்கிய குணங்களனைத்தும் அமையப்பெற்றவராயுமிருக்கின்றார். தமது அபிப்பிராயம் எவ்வாறிருப்பினும் பெரும்பான்மையோரின் முடிவை ஒப்புக்கொண்டு விஸ்வாசத்துடன் அதன்படி நடக்கும் தன்மையுடையவராயிருப்பது முக்கியமாய்க் குறிப்பிடத்தக்கது. பார்ப்பனர்களையும் அவர்கள் நம் கட்சியின் கொள்கைகளை ஒப்புக்கொண்டார்களாயின் நம் கட்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பது மூகலான அபிப்பிராய பேதங்கள் மிகுந்துள்ள இந்நெருக்கடியான சந்தர்ப்பத்தில் இம்மகாநாட்டை வெற்றியுடன் நடத்தி அவற்றை அவ்விஷயத்தைச் சமரசமாய் ஆலோசித்து முடிவு செய்வதற்கு உதவி புரிவதற்கு ஏற்றவர் இவரைத் தவிரவேறு யாருமில்லை என்றே சொல்லவேண்டும். (கரகோஷம்) எதனாலே, வரவேற்புக்கமிட்டியார் புத்திசாலித்தனத்தோடும் முன்னுணர்வோடும் அவரை இம்மகாநாட்டுக்குத்தலைவராய்த்தேர்ந்தெடுத்ததைப்பாராட்டவேண்டும். இதுவரை பல்வேறு மகாநாடுகளுக்கும் கிடைத்த தலைவர்களுள் பேருக்கத்துடனும் விஸ்வாசத்துடனும் மனமுவந்துழைக்கும் தலைவர் இம்மகாநாட்டுக்குத் தலைவராய் வாய்த்ததற்கு நாம் பெருமைபாராட்டவேண்டும். ஆகையினால் இப்பெரியார் இம்மகாநாட்டுத் தலைமைவகித்து இதனை வெற்றியுடன் நடத்தி வைக்கவேண்டுமென்று மனப்பூர்த்தியாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு ஜோசப்

திரு. ஜியார்ஜ் ஜோசப் அவர்கள் பெரும் சந்தோஷ ஆரவாரத்தினிடையே பிரேரணையை பின் ஆதரித்துப் பேசுகையில் கூறியதாவது:—நான் இப்பிரேரணையை மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன். எனக்கு முன் பேசிய திரு. ராமசாமியார் எடுத்துக் கூறியதுபோல இரண்டு மாதங்களுக்கு முன்பே அவரை இம்மகாநாட்டுக்கு வரவேற்புக் கமிட்டியார் தலைவராய்த் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். ஆதலால் அவரைக்குறித்து நாம இங்கு என்ன சொன்னாலும் சொல்லாமற்போனாலும் அவர் இம்மகாநாட்டுக்குத் தலைமைவகிக்க உரிமையுடையவர் (நகைப்பு) எனினும் அவரைப் பாராட்டி இரண்டொருவார்த்தைகள் பேசுவது முறைமையை யொட்டிய அவசியமாயிருந்து வருகிறது. அவர் இம்மகாநாட்டின் தந்தையாயிருந்து அதனைவெற்றியுடன் நடத்திவைக்கப் போகிறார். நான் இம்மகாநாட்டின் குழந்தையாய் இப்பொழுது வந்திருக்கிறேன். (கரகோஷம்) என பழைய பாவங்கள் எதுவாயினும் அவற்றைப் பொருட்படுத்தாது எனனைத தென் இந்திய நலவுரிமைச் சங்கத்தில் மெம்பராய்ச் சேர்த்துக் கொண்டதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆதலால் நான் இன்று புதுகுழந்தையாக தங்களுக்கும் தலைவர்களுக்கும் முன் தோன்றியிருக்கின்றேன் (நகைப்பு) அவருடைய தெளிவான நோக்கங்களையும் அறிவாற்றலையும் அனுபவத்தையும் கவனிக்குமிடத்து அவரைவிட இம்மகா நாட்டுக்குத் தலைமைவகிக்க வேறு தகுதியுடையவர் இருக்க முடியாதென்றே சொல்லலாம்

ராமமூர்த்தி

திரு. கானல ராமமூர்த்தி தெலுங்கில் அடுத்தபடியாக பிரேரணையை ஆதரித்துப் பேசுகையில் முதன்முதல் பார்ப்பனரல்லாதார் மகாநாடு சென்னையில் வெங்கடகிரி மகாராஜா அவர்கள் தலைமையில்கூடி சில முக்கிய விஷயங்களைக் குறித்தாலோசித்து தீர்மானங்கள் நிறைவேற்றியது. அதன்பின்னர் பிராமணரல்லாதாரியக்கம் தோன்றியது, பார்ப்பனரல்லாதாரியக்கம் தோன்றிய சுமார் 15 வருடங்களாக மக்களுக்குச் செய்துள்ள நன்மைகள் நமது எதிரிகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றது. தற்போதேற்பட்டு பல சிக்கல்களை வேரறுத்து பார்ப்பனரல்லாத கட்சிக்கு சூரியனை மேகத்திலிருந்து விடுவித்துப் பிரகாசிக்கச் செய்வதற்கு இந்நெல்லூர் மகாநாடு ஏற்ற சாதனமாயும் அதற்கு உதவி புரிய திரு. முனிசாமி நாயுடு தலைவராயும் வாய்க்கப்பெற்றது மகிழ்ச்சிக்கிடமானதேயாகும். 1923ம் வருடத்து காகிநாடா காங்கிரஸினால் ஆந்திரநாட்டுக்கு எவ்வளவு கௌரவமேற்பட்டதோ அதுபோலவே இந்நெல்லூர் மகாநாட்டால் ஆந்திர தேசத்திற்கு அதிகமான கௌரவமேற்படுமென்று நம்புகிறேன் எனக்கூறினர்.

சிமதி அலர்மேலுமங்கைத் தாயாரம்மாள் பிரேரணையை ஆதரித்துப்பேசுகையில், இம்மகாநாட்டில் அபிப்பிராய மிருந்ததும் மிகுதியும் முக்கியமுமான விஷயங்களைக்குறித்தாலோசித்து முடிவு செய்யவேண்டியதான இசசந்தர்ப்பத்தில் திரு. முனிசாமிநாயுடு அவர்களை இம்மகாநாட்டுக்குத் தலைமைவகிக்கும்படி கேட்டுக்கொள்ளும் பிரேரணையைமிகுந்த சந்தோஷத்தோடு ஆதரிக்கின்றேன். இத்தகைய சிக்கலான சந்தர்ப்பத்தில் நம்மவர்களின் க்ஷேமத்திற்காகவும் நன்மைக்காகவும் மனப்பூர்வமாயும் பொறுமையுடனும் திம்மதியுடனும் எதனையும் சீர்தூக்கி நன்காலோசித்துச்செய்யும் இயல்புடைய திரு. நாயுடு இவர்களை இம்மகாநாட்டுத்தலைவராய்த் தேர்ந்தெடுத்தது ஆந்திரர்களுக்குமட்டுமன்றி தமிழ்நாட்டாருக்கும் அளவற்ற சந்தோஷத்தைக் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை. இம்மகாநாட்டில்நமதுகட்சிக்குத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதும் பார்ப்பனர்களை நமது கட்சியில் சேர்த்துக் கொள்ளலாமா வென்பதுமான இரு முக்கியவிஷயங்களைக்குறித்து நன்காலோசிக்க வேண்டியதாயிருக்கின்றது. இந்நிலைமையில் மகாநாட்டாருடனிருந்து உதவிபுரிந்து மகாநாட்டை வெற்றியுடன் நடத்திவைத்து சிக்கலான இவ்விஷயங்களில் ஒரு முடிவுக்கு வருவதற்கு திரு. முனிசாமி நாயுடு அவர்கள் முற்றும் பொருத்தமானவரானதால் இப்பிரேரணையை நான் மனமுவந்து ஆதரிக்கின்றேன் எனக்கூறினர்.

முடிவில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு பெருத்த கரகோஷத்தினிடையே ராவ்பகதூர் பி. முனிசாமி நாயுடு அவர்கள் தலைமைவகித்தார்.

அனுதாபத் தந்திகள்

அக்கிராசனப் பேருரை முடிந்ததும் வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு. பி. ராமச்சந்திர ரெட்டி மகாநாட்டுக்குவரக் கூடாமையை விளக்கி மகாநாடு வெற்றியுடன் நிறைவேற வேண்டுமென கீழ்க்கண்டவர்கள் அனுப்பி யிருந்த தந்திச் செய்திகளையும், கடிதங்களையும் மகாநாட்டில் வாசித்தார். வெங்கடகிரி மகாராஜா, திவான் பகதூர் [illegible] ராஜுலு நாயுடு, "நாடார் குலமித்திரன்" [illegible] முத்துநாடார், ஸ்ரீ [illegible] சாமி உடையார், தேசம் [illegible] மைக் கட்சி [illegible] பால சுப்ரமணிய முதலியார், ஏ. கே. எஸ். சிவசுப்ரமணியம், குமார செட்டி, வெரிவாட செட்டியார், நாயக [illegible] சாமி, அட்வொகேட் பி. ராமனுதன்.

அக்கிராசனப் பேருரை

பின்னர் தலைவர் ராவ்பகதூர் முனிசாமி நாயுடு அவர்கள் பெரும் சந்தோஷ ஆரவாரத்திடையே அக்கிராசனப் பேருரை நிகழ்த்தினர் (இதன் விவரம் வேறிடத்தில் வெளியாகி யிருக்கின்றது)

அனுதாபத் தீர்மானங்கள்

பின்னர் கீழ்க்கண்ட இரு தீர்மானங்களும் மகாநாட்டுத் தலைவர் திரு முனிசாமி நாயுடு அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு அனைவரும் எழுந்து நின்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:—

"பார்ப்பனரல்லாத கட்சிக்கும் பொது ஜனங்களுக்கும் நாட்டிற்கும் மதிப்பிட முடியாத ஊழியம் புரிந்துள்ள காலஞ்சென்ற தலைவர் பனகால் அரசரின் மரணத்தைக் குறித்து இம்மகாநாடு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது."

"இம்மகாநாடு காலஞ்சென்ற உத்தம பாளையம் எம். டி. சுப்ரமணிய முதலியார், ராமனாதபுரம் ராஜா, திவான் பகதூர் ஓ. தணிகாசலம் செட்டி, செல்லப்பள்ளி ராஜா, ராவ்பகதூர் கே. கோபால கிருஷ்ணய்யா முதலியவர்களின் மரணத்தை குறித்து வருத்தமுடன் அவர்கள் குடும்பத்தாருக்கு மகாநாட்டின் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது."

விஷயாலோசனைக் கமிட்டி அவசியமா?

பின்னர் மகாநாட்டுத் தலைவர் ராவ்பகதூர் பி. முனிசாமி நாயுடு அவர்கள் சென்னையில் ஜஸ்டிஸ் கட்சி, மந்திரி கட்சி, கான்ஸ்டிடியூஷனல் கட்சி ஆகிய மூன்று கட்சிப்பிரதிநிதிகள் கூடியாலோசித்துத் ஜஸ்டிஸ் கட்சியின் சட்டசபைக் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று தீர்மானித்ததாயும் அதனை நல உரிமைச் சங்கத்தின் நிர்வாகக் கமிட்டியார் மகாநாட்டின் முன் ஆலோசித்து முடிவுசெய்துவிட உத்தேசித்ததாயும் இது மிக முக்கிய விஷயமானதாயும் அனைவருக்கும் ஊக்கமுடையதாயுமிருப்பதாலும், விஷயாலோசனைக் கமிட்டி கூட்டியாலோசிப்பதை மகாநாடு முழுதும் விஷயாலோசனைக் கமிட்டியாயிருந்து விவாதிப்பதா என்பதைக் குறித்து மகாநாட்டு அபிப்பிராய மறிய விரும்புவதாயும், மகாநாடு இரண்டு நாட்களுக்குத் தான்நடைபெறப்போவதால், கம் கட்சிக்குத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதா அல்லது காரியக்கமிட்டியைக் கொண்டு வேலைகளை நடத்துவதா என்னும் முக்கிய விஷயமாயும் மகாநாடு முழுதும் தனிக் கமிட்டியாயிருந்தாலோசிப்பதா வென்பதைக் குறித்து மகாநாட்டின் அபிப்பிராயத்தை அறிய விரும்புவதாயும் கூறினர்.

சர். ஏ. டி. பாத்ரோ அவர்கள் மகாநாடு முழுதும் விஷயாலோசனைக்கமிட்டியாயிருந்தாலோசிப்பதென்பது புதுமாதிரியானதாயிருப்பதாயும், விஷயம் எவ்வளவு முக்கியமானதாயினும் விஷயாலோசனைக்கமிட்டிகூட்டி யாலோசிப்பதுதான் எங்கும் முறைமையாயிருப்பதாயும், இம்முறை தான் எங்கும் அனுசரிக்கப்பட்டு வருவதாயும் சுமார் மூவாயிரம் பேருக்கு அதிகமானவர்கள் கூடியிருக்கும் இம்மகாநாடு முழுதும் விஷயாலோசனைக் கமிட்டியாயிருந்தாலோசிப்பதென்பது சாத்தியமல்லவென்றும், மேலும் தமிழ், தெலுங்கு, ஒரியா முதலிய பாஷைகளிலும் பேச்சுகளை மொழிபெயர்க்க வேண்டுமென்று பிரதிநிதிகள் வற்புறுத்துவதால் அசௌகரியமிருக்குமென்றும், பல்வேறு ஜில்லாக்களின் பிரதிநிதிகளும் விஷயாலோசனைக் கமிட்டியில் அமைதியோடும் நன்கும் விவாதிக்கப்படலாமென்றும் கூறினர்.

திரு. ஏ. ராமசாமி முதலியார் இம்முக்கியமான விஷயங்களைக் குறித்தாலோசிக்க விஷயாலோசனைக் கமிட்டி நியமிக்கப்பட்டு அதன்முடிவை மகாநாட்டார் ஒப்புக்கொள்ள கூடுமாவென்பது அவர்களுடைய ஆத்திரத்தைக் கவனித்தால் சந்தேகமாயிருப்பதாயும் (முடியாது என்ற சத்தம்) இது தமக்குத் தெரியுமென்றும், விஷயாலோசனைக் கமிட்டியில் நன்காலோசிக்கப்பட்ட பின் மீண்டும் மகாநாட்டில் அதனைக் குறித்தாலோசிப்பதனால் பின்னும் மணிக்கணக்காக நேரத்தை வீணாகக் கழிக்கவேண்டியதாகுமாதலால், மகாநாடு முழுதுமே தனிக்கமிட்டியாயிருந்து ஆலோசிப்பது தான் நலம் என்றும் எடுத்துக் கூறினர்.

திரு. ஈ. வெ. ராமசாமிப்பெரியார்:- மகாநாடு முழுதும் விஷயாலோசனைக் கமிட்டியாயிருந்து ஆலோசிக்கப்பட்டால் ஓட்டுகளை எப்படி கணக்கிடமுடியும்?

திரு. ஓ. வி. சீனிவாசன் பின்னர் விஷயாலோசனைக் கமிட்டி ஏற்படுத்தப்பட வேண்டுமென்று வற்புறுத்திப் பேசினர்.

திரு. கே. வி. கோ[illegible]யும், சர். பாத்ரோ [illegible] விஷயாலோசனைக் கமிட்டி கூட்டப்படவேண்டியது அவசியமென்று வற்புறுத்திப்பேசிய பிறகு முடிவில் திரு. ஈ. வெ. ராமசாமியார், விஷயாலோசனை கமிட்டியை நியமிப்பதை ஆதரிக்கவும், மகாநாடு முழுதும் விஷயாலோசனைக்கமிட்டியாயிருந்தாலோசிப்பதை ஆதரிக்கவும் ஆட்களிருக்கின்றனர் என்றும் இருதரப்பாருக்கும் திருப்திகரமான ஏற்பாடாக விஷயாலோசனைக் கமிட்டி கூட்டியாலோசிக்கப்படுவதை ஒப்புக்கொள்வது ஒருவிதத்தில் நேர்மையாகத்தானிருக்கின்றது எனக்கூறியதன்மேல் மகாநாட்டுத்தலைவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு அதனை மகாநாட்டினருக்கு வெளியிட்டதோடு சென்னைக்கு 10 பிரதிநிதிகளும் மற்றப்படி ஜில்லாவாரியாக ஐந்து பிரதிநிதிகளும் விஷயாலோசனைக் கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், அவர்கள் பெயர்களை மாலை 5-30மணிக்குள் தெரிவிக்கப்படவேண்டுமென்றும் அறிவித்து மாலை 4-20 மணிக்கு மகாநாட்டைக் கலைத்தார்.

ஊர்வலக்காட்சி சிறப்பு

இரவு சுமார் ஏழுமணிக்கு மகாநாட்டு ஹாலிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. தலைவரை மோட்டார் வண்டியில் மாலைகளுடன் பல வீதிகளின் வழியாய் அவரிருப்பிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டது. பாணங்கள் ஆகாயத்தில் பறந்து வெடித்தன. பாண்டுமேள வாத்தியங்கள் முழங்கின. ஊர்வலத்தில் சுமார் 3000 மக்கள் இருந்தனர்.

இரண்டாம் நாள் நடவடிக்கை

மீண்டும் மகாநாடு ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் இரண்டு மணிக்குக் கூடிற்று. விஷயாலோசனைக் கமிட்டியின் [illegible] பார்ப்பனர்களைத் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தில் சேர்க்கவேண்டுமென்னும் தீர்மானமும் பார்ப்பனர்களைச் சட்டசபை கட்சியில் சேர்த்துக்கொள்ள [illegible] தீர்மானமும் தோற்றது. ஆனால் சட்டசபைக் [illegible] பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ள[illegible] என்னும் தீர்மானத்தின் மீது ஓட்டு எடுப்பதற்காக பிரதிநிதிகளை ஜில்லாவாரியாக உட்காரவைக்கப் பட்டிருந்தது. மகாநாடு கூடியதும் தலைவர் பார்ப்பனர்களைத் தென்னிந்திய நலவுரிமைச்சங்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்னும் தீர்மானமும் சட்டசபைக் கட்சியில் பார்ப்பனர்களைச்சேர்த்துக்கொள்ள வேண்டுமென்னும்தீர்மானமும் விஷயாலோசனை கமிட்டியில் தோற்றுவிட்டதென்றும், தாம் தலைவர் என்

னும் ஜோதாவில் சட்டசபைக் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ளலாம் என்னும் தீர்மானத்தை மகாநாட்டின் ஓட்டிற்கு விடப்போவதாயும் தாம்ஜில்லா வாரியாக ஓட்டு எடுக்கப் போவதாயும் அதாவது ஒவ்வொரு ஜில்லாப்பிரதிநிதிகளிலும் எத்தனை பிரதிநிதிகள் அதற்கு ஆதரவு அளிக்கின்றார்கள் என்றும் பாதகமாக எத்தனை பேர்கள் இருக்கின்றார்கள் என்றும் கணக்கிட்டு எதற்கு ஓட்டு அதிகமாக இருக்கின்றதோ அதற்கு அதன் ஓட்டு எடுத்துக் கொள்வதாயும் கூறினார். அவ்விதமே ஓட்டுகள் எடுக்கப்பட்டன. அவ்வாறு ஓட்டு எடுக்கப்பட்டதில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்வதற்காதரவாய் 13 ஓட்டுகளும், எதிரிடையாக 14 ஓட்டுகளும் கிடைத்தமையால் அது தோற்றது.

ஆதரவாக ஓட்டுச்செய்த ஜில்லாக்கள்

1. கஞ்சம்.
2. விசாகப்பட்டணம்.
3. கிருஷ்ணா.
4. குண்டூர்.
5. கடப்பா.
6. அனந்தபூர்.
7. பெல்லாரி
8. நெல்லூர்.
9. தென்கன்னடம்.
10. தென்ஆற்காடு.
11. செங்கற்பட்டு.
12. கோயமுத்தூர்.
13. சித்தூர்.

எதிரிடையாக ஓட்டுச்செய்த ஜில்லாக்கள்

1. திருச்சி.
2. தஞ்சைமேற்கு.
3. தஞ்சை கிழக்கு.
4. சென்னை.
5. ராமநாதபுரம்.
6. திருநெல்வேலி.
7. மேற்குகோதாவரி.
8. கிழக்குகோதாவரி.
9. கர்னூல்.
10. மலையாளம்.
11. நீலகிரி.
12. வடஆற்காடு.
13. சேலம்.
14. மதுரை.

தலைவர் தீர்மானம்தோற்றுவிட்டதாகத் தெரிவித்தார்.

தலைவர் தேர்தல் வாதம்

அப்பால் தலைவர் தென்னிந்தியநலவுரிமைச்சங்கத்தின்நிர்வாகசபை ஒவ்வொரு ஜில்லாவிற்கு ஐந்துப்பிரதிநிதிகள் வீதம் தேர்ந்தெடுத்து ஒரு கமிட்டி நியமித்து தலைவரைத்தேர்ந்தெடுக்க வேண்டுமென சிபார்சு செய்துள்ள தீர்மானத்தை வாசித்துக்காட்டி, அதைச்சபை முன்வைத்து அதற்கு யாராவது திருத்தத்தீர்மானம் கொண்டுவர விரும்பினால் கொண்டுவரலாமென்று கூறினார். சென்னைக்குப் பத்துப்பிரதிநிதிகள் வேண்டுமென்று கேட்கப்பட்டது. அதை ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஈ. வி. ராமசாமிப்பெரியார் திருத்தத் தீர்மானம்

உயர்திரு. ராமசாமிப்பெரியார்பெரும் கரகோஷத்துடன் எழுந்து கூறியதாவது:–

இப்பொழுது தலைவரைத் தேர்ந்தெடுக்கஒரு கமிட்டி நியமிக்கவேண்டுமென்று தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போதைய நிலைமையையும் வரும் தேர்தலையும் ஒற்றுமையையும் உத்தேசித்து ஐந்து அல்லது ஏழு அல்லது அதற்கு மேற்பட்டவர்களை கொண்டதோர் கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென பிரேரேபிக்கின்றேன். ஆனால் இதற்கு ஒரு பெரும் ஆட்சேபனை செய்யலாம். உலகில் எங்கும் கட்சிகள் ஒரே தலைவரின் ஆதரவிலே தானிருக்கின்றனவென்றும், கட்சிக்கு தலைவரை தேர்ந்தெடுக்காதிருப்பது கேவலம் என்றும் கூறலாம். நமது கட்சிக்கு இப்பொழுது எவ்வளவு பலமிருக்கின்றதென்பது நான் சொல்லாமலே தெரியும். நமது கட்சியில் பலர் வந்து சேர்ந்த வண்ணமாகவே இருக்கின்றனர். நமக்கு ஆகவேண்டியகாரியங்களை மந்திரிமார்களின் பலத்தை கொண்டும் சாதித்து வருகின்றோம். சட்டசபைத் தலைவரும் கூடவந்துவிடக் கூடுமென்றும் கேள்விப்பட்டேன். பார்ப்பனர்களுடன் கூடிக்குலாவிய நாங்களெல்லாம் பிரிந்து வரும் சமயத்தில் நீங்களேன் பார்ப்பனர்களை சேர்க்கப்போகின்றீர்கள் என்றும் பலர் என்னைகேட்டுள்ளனர். எனவே எல்லோரும் ஒற்றுமையாய் காரியம் நடத்த தற்காலம் கமிட்டி நியமிப்பதே நலம் என்று கருதுகின்றேன். ஒரு கமிட்டிக்கு இருக்கும் பலம், பெரும்பான்மையான வோட்டுக்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவருக்கு இருக்காது. இப்பொழுது ஜஸ்டிஸ் கட்சியார் கான்ஸ்டிடியூசனல் கட்சியார் மந்திரி கட்சியார் முதலியோர்கள் ஒற்றுமையா யிருப்பதாலே கட்சிக்கு இவ்வளவு ஆதரவும் இருக்கின்றது. பலர்வந்து சேர்ந்துகொண்டு இருக்கின்றனர். கட்சி [illegible] ஒப் சோஜனல் தேர்தலுக்கு [illegible] ட்சிப்பெயரைச் சொல்லி

திரமாட்டார்கள். எந்த கட்சி ஜெயம் பெறுகிறதோ அதில் சேர்ந்துகொள்ளலாம் என்று சுயேச்சையாகவே நிற்பர். எத்தனை பேர்கள் கட்சியின் பெயரால் தேர்தலுக்கு நின்றார்கள் என்பதை வைத்துக்கொண்டு தான் கட்சிக்குப் பெருமை ஏற்படும் காலமாக இருக்கின்றதே தவிர, கட்சிக் கொள்கைக்காக எத்தனை பேர்கள் செத்தார்கள் என்று எண்ணும் காலம் இன்னும் வரவில்லை. கொள்கை தான் பெரிது; பிரிந்து போபவர்களைப் பற்றி கவலையில்லை என்று இன்று வீரியம் பேசுபவர்களில் நூற்றுக்கு 95 பேர்கள் நேற்றுப் பிரிந்து சென்று மீண்டும் வந்தவர்களாகவே இருப்பர். நெல்லூர் மகாநாட்டில் பிளவு இல்லாதும் அபிப்பிராயபேதமில்லாதும் ஒற்றுமையாய்போனோம் என்று பெயர் எடுப்பது தான் பெருமையாயிருக்கும்நாமெல்லோரும் ஒற்றுமையாயிருந்ததினால்தான் சுனம் முத்தையா முதலியோர் வகுப்புவாரி அரசாங்க உத்தரவு பிறப்பிக்க முடிந்தது. அதற்கு நமக்குள்ளிருக்கும் கட்டுப்பாடும் பலமுந்தான் காரணம். எனவே பிளவு வேற்றுமைகள் எதுவும் ஏற்படாதிருப்பதற்காக அடுத்ததேர்தல்வரை ஒரு கமிட்டி ஏற்படுத்துவதே நலமாகும். அடுத்த சீர்திருத்தத்தில் ஏழு அல்லது எட்டு மந்திரி பதவிகள் கொடுக்கப்படுமென கனவுகண்டு கொண்டிருக்கின்றார்கள். அப்படி வந்தால் அப்பொழுது சட்டசபையிலுள்ள வேறு கட்சியாருக்கு நாம் மந்திரி பதவிகள் கொடுத்து வேலை செய்ய முடியாது.

திரு. சாம்னுட் தீர்மானத்தை ஆதரித்தார்.

திரு. ஜே. என். ராமனுதன் அவர்கள் கமிட்டி கூடாது. ஆனால், தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென் றுவற்புறுத்திப் பேசுகையில், நாம் ஒரு தலைவரைத்தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியாமல் காரியக் கமிட்டியை தேர்ந்தெடுப்போமாயின் அது மிகமானக்கேடானதாயிருக்கின்றது. நம்மை தேசத்துரோக, அரசாங்கத்தை ஆதரிக்கும் கட்சி என்று இழிவாகக் கூறிய எதிரிகளும் நம் வேலைகளில் நற்சாட்சிப் பத்திரமளித்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நாம் நம்மவர்களுக்குள் ஒரு தகுதி வாய்ந்த தலைவரைத் தெரிந்தெடுக்க முடியவில்லை என்பது கேவலமானது. நமக்குள் ஒற்றுமையில்லையாதலால் காரியக் கமிட்டியிருக்கவேண்டுமென்னும் திருத்தப் பிரேரணையை நிறைவேற்றவேண்டுமென்பது சரியல்ல. ஆதலால் நான் தலைவர் ஒருவரைத்தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகின்றேன் என்று கூறினர்.

திரு. சுரேந்திரநாத் ஆரியா அவர்கள் தெலுங்கில் பேசுகையில் தலையில்லாத கட்சி என்பது கேவலமானது. நமக்குள் பிராமணரல்லாத மக்களின் கண்ணைக் கவரும் செல்வாக்குள்ளவரானவர் இளைஞரோ வயோதிகரோ அல்லது பலவீனரோ, எவராயினும் தலைவர் என்பவர் ஒருவரிருக்கவேண்டும். ஒருபொம்மையாயினும் கட்டையாயினும் அந்த தலைவர் வழிகாட்டுகையில் நாம் நமது உயிரையும் விடத்தயாராக விருக்க வேண்டும். தலைவரில்லாமல் தலைவரைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை என்பது மானக்கேடானது எனக் கூறினர்.

திரு. படேட்டி வெங்கடராமய்யா கமிட்டி நியமனத்தை ஆதரித்து தெலுங்கில்பேசுகையில், ஜில்லா வாரியான பிரதிநிதித்துவமுள்ள காரியக் கமிட்டியைத் தேர்ந்தெடுத்து வருடவாரி மகாநாட்டுத் தலைவரையே கட்சித்தலைவராய்க் காங்கிரசைப் போல ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன் எனக் கூறினர்.

திரு. ஓ. சி. சினிவாசன் கமிட்டி நியமனத்தை எதிர்த்துப் பேசுகையில், இவ்வியக்கத்தைத் தோற்றுவித்த சர். பி. தியாகராய செட்டியார், டாக்டர் நாயர் முதலான தலைவர்கள் இயற்கையான தலைவர்களா யிருந்ததால் அவர்களுக்கு நாம் சகல உரிமைகளுமளித்திருந்தோம். ஆனால் தற்போது தலைவராகத் தெரிந்தெடுக்கும் போது நாம்அவரை நமது எஜமானனாகக் கொள்ளவில்லை. ஆனால் தொண்டராகத் தேர்ந்தெடுக்கின்றோம். அவர் கட்சியின் அரசியல் அமைப்புத்திட்டப்படி நடக்க வேண்டுமேயன்றி விதிகளுக்கு மீறி தன்னிச்சையாக ஒன்றும் செய்ய முடியாது. அவ்வாறிருக்க ஏன் தலைவர் தேர்தலைக் குறித்து பயப்படவேண்டும் கமிட்டி தேர்தல் என்பது மிக ஆபத்தானது. நாம் தேர்ந்தெடுக்கும் தலைவர்நமது எஜமானனல்ல. ஆனால் தொண்டன் என்பதை வற்புறுத்துகின்றேன் எனக் கூறினர்

பிறகு மகாநாட்டுத்தலைவர் ராவ்பகதூர் பி. முனிசாமிநாயுடு அவர்கள் இவ்விஷயமாக சில முக்கியமான தலைவர்களின் அபிப்பிராயத்தை அறிந்த பின் அந்த தீர்மானத்தை ஓட்டுக்கு விட்டு முடிவு செய்வதாகத் தெரிவித்து முதலில் டாக்டர் வி. நடேச முதலியாரைத் தமது அபிப்பிராயத்தை அறிவிக்கும்படி அழைத்தார்.

தலைவர்கள் அபிப்பிராயம்

[illegible]

சர். ஏ. பி. பாத்ரோ

[illegible]

மகாநாட்டுக்கு வந்திருந்தவர்கள்

[illegible]

வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு: பி. ராமசந்திர ரெட்டி பேருரை

[illegible]

முதல் பார்ப்பனரல்லாதார் மகாநாடு

[illegible]

பானகல் அரசர் மரணம்

[illegible]

கட்சிக் கொள்கை

[illegible]

இருப்பது முடியாத காரியம். அவ்விதம் ஒதுங்கி இருப்பதால் லாபமும் கிடையாது. பார்ப்பனரல்லாதாரின் பல்வேறு கட்சியாரும் இவ்வடிப்படையான கொள்கையை உணர்ந்துள்ளார்கள். இந்த சமூகத்தை ஒன்றுபடுத்தி ஒழுங்கு செய்வது அரசியலிலும் சமூதாயத்திலும் இந்தியா புத்துயிர் பெற சரியான சாதகமாயிருக்குமென்றும் கொணர்ந்துள்ளார்கள். இவைகள்தான் பார்ப்பனரல்லாதார் கட்சிகளுள்ள பரஸ்பர நம்பிக்கையும் வழி உண்டுபண்ணியுள்ளது.

கட்சியின் செல்வாக்கு

ராஜா சாகிப்பின் மரணத்திற்கு முன் கட்சியின் செல்வாக்குப் பெருகியது என்பது மறுக்க முடியாதது. அவர் மரணத்திற்குப்பின் எல்லாக்கட்சியினரும் ஒன்று சேரவேண்டியது அவசியமாகியது. ராஜா சாகிப்பின் அரசியல் வாழ்க்கை சென்னை மாகாண அரசியல் சரித்திரத்திலும் இந்தியாவின் அரசியல் சரித்திரத்திலும் மிகவும் முக்கியமானதாயிருப்பதுபோன்று, அவருடைய மரணமும் பார்ப்பனரல்லாதார் சரித்திரத்தில் குறிப்பிடத் தக்க முக்கியமான விடயமாகும். அவர்கஷ்டமானகாலத்தில் கட்சியை நடத்திவந்தார். ஆனால் அவருக்கு ஓர் உண்மையான அரசனுக்கு இருக்கும் அறிவு இருந்தது. அவர் சாமர்த்தியவான் ஆனதால் பின்வாங்கி தாக்குவதற்கு சமயம் வாய்க்கும்வரைகாத்திருப்பதின் பெருமையை அவர் அறிந்திருந்தார், அவர் கடைசி காலத்தில் எல்லோரும் ஒன்று படவேண்டுமென்று கூறியது பலத்தன்றது இப்பொழுது பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் அவசியத்தைப்பற்றி இப்பொழுது கூறப்புகுவது பழங் கதையாகவிருக்கும் நாம் ஒரு கட்சியாய் இருக்க வேண்டியதின் அவசியத்தை மறந்து விடமுடியாது. சாம்கூட்டுறவிலும் பிரிவிலும் மானிடஇயற்கையை உணர்ந்துள்ளோம். சமஉரிமை பெறுவதற்கும் ஏகபோகத்தை உடைப்பதற்கும் நாம் ஒரு கட்சியினராக இருக்க வேண்டியதின் அவசியத்தை உணர்ந்துள்ளோம்.

சமுதாயச் சீர்திருத்தம்

சமுதாயச் சீர்திருத்தத்தில் ஒவ்வொருவர் அபிப்பிராயம் எவ்விதமாகவிருந்தபோதிலும் தமிழ் நாட்டில் திரு. ஈ. வெ. ராமசாமியும் மகாராஷ்டிர தேயத்தில் ஜோதி ராவ்புலே ஏற்படுத்திய சமுதாயச் சீர்திருத்த இயக்கங்கள் நமக்குள் அன்பைஉண்டாக்கியுள்ளனவென்று கூறுவது மிகையாகாது.

வகுப்பு நியாயம்

வகுப்பு நீதி வழங்குப்படி கேட்கும் போதெல்லாம் சிலர் நாட்டிற்கு ஆபத்து வந்துவிட்டதெனக் கூறுவது தற்கால சாசரிக வழக்கமாய்ப் போயுள்ளது. அவ்விதம்வகுப்பு நீதிவழங்கும்படிக்குக் கேட்பதால் சுயராஜ்யக் கோரிக்கைக்கு பலவீனமுண்டாகவில்லை என்பதைதேச சரித்திரமே காட்டுகின்றது. ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் பார்ப்பனருக்கு எவ்வளவு சுதந்திரமிருக்கின்றனவோ அவ்வளவு தனக்கு இருக்க வேண்டுமென உணருகின்றனர் என்பது மறுக்க முடியாது. முசல்மான்கட்கு சுதந்திரம் காட்டுவது அவசியமென்று சில அரசியல் வாதிகள் கருதுவதை அங்கீகரிக்கின்றேன். ஆனால் பார்ப்பனரல்லாதார் மானிட வர்க்கத்தின் சாதாரண உரிமையை பெறப் பாடுபடும்போது அதை தேசத்திற்கு விரோதமானதென்று கூறுவதை தான் என்னால் அறிய முடியவில்லை

மகாநாட்டின் பொறுப்பு

இம்மகாநாட்டிற்கு ஒரு பெரிய பொறுப்பு இருக்கின்றது. அது தலைவர் தேர்தலும் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் திட்டத்தில் மாறுதல்கள் செய்வதுமாகும். நாம் இதில் ஜாக்கிரதையாய் நடந்துகொள்ளவேண்டும். இல்லையேல் நமது இயக்கத்தை பலவீனப்படுத்திவிடும். அபூர்வமாகவேதான் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுபவர். அவர்களோ அவர்களின் யோக்கியதைக்காகவோ அல்லது சந்தர்ப்பத்தையொட்டியேதான் தேர்ந்தெடுக்கப்படும். தற்பொழுது ஒரு சிறந்த தலைவரைப் பெறுவது முடியாத காரியம். ஒரு தலைவரை வழக்கம் பற்றி தேர்ந்தெடுப்பது ஆபத்தானதாகும். ஏனென்றால் அவ்விதமான தேர்தல்களின் முடிவு பின்னர் அதிருப்திகரமாகவே இருக்கும். தலைவர் தேர்தலுக்கு யோசனைகள் கூறப்பட்டுள்ளன. எல்லோருமே ஆர்வமுடன் இருப்பார்களாயின் ஒரு தலைவர் ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்படுவார். பிரதிநிதிகளாயினும், பிரதிநிதிகள் கமிட்டியாயினும், ஒரு நிருவாகக் கமிட்டியை நியமிக்கக்கூடும். இந்த நிர்வாகக் கமிட்டியும் ஒரு தலைவரைத் தேர்தல்கூடும். பிற்கூறப்பட்டபடி நடக்குமாயின் கமிட்டி பெரியதாய் இருந்தால் கமிட்டித்தலைவர் எதேச்சாதிகாரத்தன்மையை அடைந்து விடுவர். கமிட்டி சிறியதாய் இருந்தால் திறமையுள்ள நிருவாகத்தை கையாளத்தக்க ஆற்றல் இல்லாமற் போய்விடும்.

(இதன் தொடர்ச்சி 6-ம்பக்கம் பார்க்க)

திராவிடன்

சென்னை 1929 அக்டோபர் 7

நெல்லூர் மகாநாடு

நெல்லூர் மகாநாடு சீரும் சிறப்புடனும் ஒற்றுமைப் பேரொலியுடனும் முடிவுற்றது நமக்குப் பெருமகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. நம் கட்சிக்கு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் பெரும் பிளவு ஏற்படுமென்றும், அதனால் மகாநாடே குழப்பத்தில் முடியுமென்றும், அவ்வாறு முடிந்தால் பார்ப்பனரல்லாதார் கட்சி மாண்டு மடிந்துவிடுமென்றும், நம் அரசியல் விரோதிகள் எதிர்பார்த்து நெல்லூர்மகாநாட்டின் முடிவிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமுடையவர்களாய் இருந்தார்கள். ஆனால், அவர்கள் எதிர்பார்த்ததற்கு விரோதமாய் எல்லாம் முடிந்தது. ஏனெனின் நமக்குள் தலைவர் தேர்தலில் சண்டை நேராமல், நம் கட்சிக்குள் யாதொரு பிளவும் உண்டாகாமல், மகாநாட்டின் தலைவராய்த் துலங்கிய திரு. பி. முனிசாமி நாயுடு அவர்களையே நம் தலைவராய் ஏகமனதாய்த் தெரிந்தெடுத்துக்கொண்டோம். இத்தேர்தல் மகாநாட்டிற்கு வந்திருந்த எல்லாப் பிரதிநிதிகளுக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அம்மட்டோ; இத்தேர்தல் தமிழ்நாடு ஆந்திரநாடு முழுதும் பெரும் உவகையுடன் வரவேற்கப்படும் என்பது உறுதி.

மகாநாட்டில் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தில் பார்ப்பனரைச் சேர்த்துக்கொள்ளக்கூடாதென்ற தீர்மானம் அடியோடு தோற்றுப்போயிற்று. அதனை எவரும் ஆதரிக்க மறுத்துவிட்டார்கள். இது நமக்கு அளவுகடந்த மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. நாம் பல்முறை தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தில் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்றும், அவ்வாறு சேர்த்தால் கட்சிக்கே ஆபத்து வந்துவிடுமென்றும் எச்சரிக்கை செய்துள்ளோம். இவ்வெச்சரிக்கையை மேற்கொண்டு மகாநாடு ஒரேயடியாய் பார்ப்பனரைச் சேர்த்துக்கொள்ளக்கூடாதென்ற முடிவுக்கு வந்தது பாராட்டத்தக்கதாகும்.

இனித் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் சட்டசபைக் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ளலாம் என்ற தீர்மானம் ஒரே ஒரு ஓட்டால் தோல்வியுற்றது. இதிலிருந்து சட்டசபைக் கட்சியில் மட்டும் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு நம்மக்கள் ஆதரவளிக்கின்றார்களென்பது வெட்டவெளிச்சமாகின்றது.

நெல்லூர் மகாநாட்டில் நாம் மிக ஒற்றுமையுடன் கூடி, ஒற்றுமையாய்த் திரும்பினோம். நம்மை விட்டுப் பல ஆண்டுகள் பிரிந்திருந்த நம் ஆர். கே. சண்முகம் மீண்டும் நம்மிடையே வந்து சேர்ந்தார். அரசியல் உலகில் புகுந்தது முதல் காங்கிரஸ் என்னும் பார்ப்பனப் படுகுழியில் அமிழ்ந்து கிடந்த திரு. ஜார்ஜ் ஜோசப் அக்குழியினின்றும் மேலேறி நம்மைச் சார்ந்தார். ஆகவே நெல்லூர் மகாநாட்டில் நம் கட்சி மிகப் பலப்பட்டது என்றே சொல்லவேண்டும்.

இறுதியாக நாம் ஒன்று சொல்லவேண்டியவர்களாய் உள்ளோம். நாம் ஏகமனதாய் நம் கட்சிக்கு ராவ்பகதூர் முனிசாமி நாயுடு அவர்களைத் தலைவராய்த் தெரிந்தெடுத்துள்ளோம். இவர் இப்பதவிக்குத் தகுதியானவரென்று யாவரும் ஒப்புக்கொள்வர். இவர் தேர்தலை இராமசாமிப்பெரியார், டாக்டர் சுப்பராயன், திரு. ஆர். கே. சண்முகம், பி. டி. இராஜன், ஜார்ஜ் ஜோசப் முதலியோர் போற்றியிருப்பதிலிருந்தே, இவர் தலைவருக்குப் பலவாற்றானும் தகுதியுடையவரென்பது புலப்படும். எனவே, நாம் திரு. பி. முனிசாமி நாயுடு அவர்கட்கு நமது வாழ்த்துதலைக் கூறுதலோடு, அவர்கட்கு ஒரு வேண்டுகோளும் விண்ணப்பிக்க விரும்புகின்றோம். சட்ட சபைத் தேர்தல் அடுத்த ஆண்டில் கட்டாயம் வரும் என்று நாம் திண்ணமாய் நம்புகின்றோம். அதற்குள் நம் கட்சியைக் குறித்து பலமான பிரசாரம் நடைபெற வேண்டும். இது மிகவும் அவசியமானது. கிராமங்களில் படிப்பு வாசனையற்றுக் கிடக்கும் நம் மக்கள் இன்னும் நம இயக்கத்தின் கொள்கைகளை அறியாமல் பார்ப்பனர்கள் வலையில் சிக்கித் தவிக்கின்றார்கள். இவர்களையெல்லாம் எழுப்ப வேண்டும். மற்றும் கிராமங்கள் தோறும், நகரங்கள் தோறும் தாலூக்காக்கள் தோறும் ஜில்லாக்கள் தோறும் தென்னிந்திய நலவுரிமைச் சங்கங்கள் நிறுவ ஏற்பாடு செய்தல் வேண்டும். இவைகளை நம் முனிசாமி நாயுடு அவர்கள் செய்வாராயின், நம் கட்சி அடுத்த சட்டசபைத்தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் அதிகார பதவியைப் பெறும்! பெறும்! இது திண்ணம்.

திருச்சி தண்ணீர் வசதி தொல்லை

இம்மாகாணத்தின் மாபெரும் நகரமாகிய திருச்சிராப்பள்ளியில் ஒரு பெருங்குறை நீடித்துக் காணப்படுகின்றது. நகரத்தின் இடையே காவேரி ஆறு ஓடிக்கொண்டிருப்பினும் கூட, இவ்வூரில் குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருப்பது தான் வியப்பாய் இருக்கின்றது. அருகாமையில் ஆறு ஏரி இல்லாத ஊர்களிற் கூட இக்காலத்தில் தண்ணீர் வறுமை காணப்படுவதில்லை. ஒவ்வொரு ஊர்களில் 40 மைல் 30 மைல் தூரத்திலிருந்தும் தண்ணீர் வசதி அளிக்கப்பெற்று வர, ஒரு பெரும் ஆற்றை ஊருக்கிடையே வைத்துக்கொண்டு, இவ்வூர் மக்கள் குடிநீருக்கு அலைப்படுவது மிகவும் வருந்தத்தக்கதே. பல ஆண்டுகளாக போதிய தண்ணீர்க்குழாய்களே இல்லாமலிருந்தது. இதன்பிறகு ஒரு பிரபல நகரசபைத் தலைவர் காலத்தில் குழாய்கள் பெருமிதமாக அமைக்கப்பட்டன. அப்படிச் செய்தும் போதியபடி தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களை இவ்வூரில் அமைக்காததைப்பற்றி, தண்ணீர் ஆற்றுக் கிணறுகளிலிருந்து, ஊருக்குள் தீவிரமாய் ஏறிச் செல்ல முடியாத நிலைமையில் இருக்கின்றது. இதன்பயனாய் இவ்வூரில் பெரும்பான்மையான வீடுகளில் எல்லாம் ஒரு ஆள்மட்டம் அரையாள் மட்டத்திற்குக் குழி தோண்டி, இக்குழிகட்குள் இருந்தே குழாய் வழி வரும் நீரை மேலேற்றிச் செல்ல வேண்டி இருக்கின்றது. இதனிலும், நேராக ஆற்றுக்கே சென்று நீரெடுத்து வருதல் எளிதென்றே எமக்குப் புலப்படுகின்றது. போதிய அளவில் தண்ணீர் வழங்காமலும், போதிய ஆற்றலுடன் தண்ணீரை மேலேற்றாமலும் இருப்பதற்கு இவ்வூரில் உள்ள நீர் இறைக்கும் இயந்திரம் மிகச் சிறியதாய் இருப்பதே காரணமாய் இருக்கின்றது. பெரும் இயந்திரத்தை வாங்கி அமைக்க நகர சபைக்குப் பொருளாதார வசதி இல்லை போலும். தங்கட்கள் நகரங்களை எல்லாத் துறைகளிலும் முதற்றர நகரங்களாக ஏடேற்றுவித்தலைத் தவிர வேறு எந்த வேலையும் நகர சபையார்கட்கு இல்லை. திருச்சி நகர சபையார் பொருளாதாரக் குறைவு பற்றி பெரிய இயந்திரங்களை வாங்கி இந்நகருக்குப் போதிய நீர வசதியை அளிக்க, இவ்வரசாங்கம் துணைபுரிதல் மிகவும் அவசியமாம். இதுபற்றி சமீபத்தில் கனம் டாக்டர் சுப்பராயனுக்கு இச்சில்லா சுயமரியாதைச் சங்கத்தினர் சார்பில் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் படித்துக்கொடுத்த வரவேற்புப் பத்திரத்தில், இப்பெருங் குறையை நிவர்த்திக்குமாறு வேண்டிக் கொள்ளப்பட்டது. கனம் மந்திரியவர்களும் தன்னால் இயன்றதைச் செய்வதாக ஒப்புக்கொண்டார். இதனை நாம் மனமுவந்து போற்றுவதுடன், திருச்சியின் இச்சீர்கேடான நிலைமை கடிதில் நிவர்த்திக்கப்படும் என்றும் எதிர்பார்க்கின்றோம். பொன்மலையின் தொழிலாளர்கட்கு அளிக்கப்படும் தண்ணீர் வசதியையும் இவ்வூர் நிலைமையையும் ஒப்புநோக்கின், இவ்வூரின் நிலைமை மிகவும் பரிதாபகரமானதென்பதே எமது துணிபு. கடிதில் போதிய நலனை அளிக்க நாம் கனம் டாக்டர் சுப்பராயனை வேண்டுகின்றோம்.

கோவாப்பரேடிவ் பாங்கியில் தீ

2 பர்மியர்கள் கைது செய்யப்பட்டனர்

ரங்கூன், அக், 5

மாந்தலே நகரத்திலுள்ள கோவாப்பரேடிவ் பாங்கி எரிந்துபோய் விட்டது. இது வைப்புத்தீயால் எரிக்கப்பட்டதாய்க் கருதி, தப்பறியும் போலீசார் பாங்கி உதவி மானேஜர் எம். கி. மௌங் என்பவரையும் குமாஸ்தா டின்ஜி என்பவரையும் கைது செய்திருக்கின்றனர்.

திரு. வில்லியம் கிரகாமின் பேச்சு

இங்கிலாந்தின் தற்கால வர்த்தக நிலைமை

ரக்பி, அக், 5

எடின்பரோவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் வர்த்தக சங்கத்துத் தலைவர் திரு. உவில்லியம் கிராகாம் பின்வருமாறு பேசினர்:—ஹேக் மகாநாட்டு முடிவின்படி இத்தாலி தேசம் பிரிட்டிஷ் தீவுகளிலிருந்து மூன்று ஆண்டுகட்கு வருடம் 30 லட்சம் டன் நிலக்கரி வாங்க உடன்பட்டுள்ளது; ஜர்மனியர்கள் சாமான்களாகவே 10 வருடங்கட்கு இங்கிலாந்துக்கு சரக்கு அனுப்புவார்கள். இதன் பேரில் இனி தொழிலாளர் வேலை நேரத்தைப் பற்றியும் மற்றும் உள்ள பல விஷயங்களையும் சர்வதேச சங்கத்தார் முடிவு செய்ய வேண்டும். சர்வதேச நிலக்கரி சுரங்க சொந்தக்காரர்கள் ஒரு மகாநாடு கூட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஆகேகமாய் திருப்திகரமான முடிவு ஏற்படக்கூடும். பாதுகாப்பு வரியை உயர்த்தாமல் இருக்கும் விஷயத்தில், இது பற்றி இன்ன சாமான்களுக்கு மட்டும் பாதுகாப்பு வரி விதித்துக் கொள்ளுவதென்று சர்வதேசங்களும் கலந்து வரையறுத்துக்கொள்ளலாம். இல்லாவிடில் தனித்தனி தேசங்களாக ஒன்றுக்கொன்று உடன்படிக்கை செய்துகொள்ளுதலும் நன்று. இப்பொழுதுள்ள நிலைமையில், ஐரோப்பிய நாடுகள் ஐக்கிய நாடுகளாக நிர்வாகம் செய்வதற்கும் சில அரசியல் தடைகள் உள்ளன. ஐரோப்பா ஐக்கிய நாடுகளாக ஒன்றுபட்டு முயற்சிப்பது அமெரிக்காவின் உயர்வை எதிர்ப்பதற்காக சூழ்ச்சி செய்வதற்கென்று சிலர் கருதுவது பிசகு. இத்தகைய சூழ்ச்சியான கொள்கை பிரதம மந்திரி செய்துவரும் வேலையைபாழ்படுத்தும்.

ஜூகோஸ்லாவியாராஜாங்கம்

ரக்பி, அக்டோ, 5

சர்பிய தேசம், க்ரோட் தேசம், ஸ்லோவிய தேசம் மூன்றும் இணைந்து ஒன்றுபட்டு ஜூகோஸ்லாவியாராஜாங்கம் என்றழைக்கப்படும் என்று பெல்கிரேட் நகரத்தில்கூடிய தேசங்களின் மந்திரிகள்கூடி தீர்மானித்திருக்கின்றனர்.

அகில வங்காள சதீன்சென் நாள்

கூட்டத்தில் போலீஸ் ஒற்றர் தாக்கப்படல்.

கல்கத்தா, அக், 7

அகில வங்காள சதீன்சென் நாள் கொண்டாட்ட சம்பந்தமாக, நகரிலும் சுற்றுப்புறங்களிலும் பல கூட்டங்கள் நடைபெற்றன. சிரத்தானந்தர் பார்க்கில் திரு. சுபாஷ் சந்திர போஸின் தலைமையில் நடைபெற்ற பெருங்கூட்டத்தில், அரசாங்க (போலீஸ்) ரிப்போர்ட்டர்கள் வந்திருந்ததனால் அசம்பாவிதமான நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. கூட்டமுடிவில் போலீஸ் ஒற்றராக சந்தேகிக்கப்பட்ட ஒருரிபோர்ட்டர் யாரோ சிலரால் தாக்கப்பட்டனரென்று அறிவிக்கப்படுகிறது.

திரு. சுபாஷ் சந்திரபோஸ் தமது சொந்த அபிப்பிராயத்தில், ஜதீன்தாஸ் மரணத்திற்குப் பிறகு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உண்ணாவிரதத்தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கக் கூடாதென்று கருதுவதாகக் கூறினர்.

அ. பிரஸ்.

லாகூர்சதி வழக்கு

கதர் அணிந்த சாட்சி பெயர் கூற மறுத்தல்

‘யான் பிறப்பினால் அடிமை நாட்டினால் இந்தியன்’

லாகூர், அக், 5

இன்று சதிவழக்கு தொடங்கியது. நேற்று உண்ணாவிரதத்தைக் கைவிட்ட பகத்சிங்கும் தத்தரும் உடல் நலத்துடனும் மகிழ்ச்சிகரமாகவும் காணப்பட்டனர். இன்றுகாலை அவர்கள் சோடாவோடு கலந்த பாலும் பழங்களும் உட்கொண்டனர். பால் அதிகம் கொண்டதால் பகத்சிங்கின் கனம் 113 பவுண்டிலிருந்து 117 பவுண்டு வரையிலும் தத்தரின் கனம் 102 பவுண்டிலிருந்து 104 பவுண்டு வரையிலும் அதிகப்பட்டது. நாட்டுமொழி பத்திரிகைகளில் சில பகத்சிங்கிற்கு அளிக்கப்பட்டபோது, ஒரு போலீஸ் அதிகாரி தலையிட்டனராம். இவ்விஷயம் மாஜிஸ்டிரேட்டிற்கு அறிவிக்கப்பட்டது. மாஜிஸ்டிரேட் அப்பத்திரிகைகளை அநுமதித்தனர்.

பிரதிவாத வக்கீல் பிராஸிகியூஷன் சாட்சிகள் போலீசாருடனிருப்பதால் சாட்சியம்செம்மையானதாகவிராதென்று ஆட்சேபனையெழுப்பினர். பிராஸிகியூஷன் தரப்பார் ஆட்சேபனையை மறுத்து போலீசாரை சாட்சிகளை நெருக்காதவாறு செய்வதாக வாக்களித்தனர்.

பஞ்சாப் தேசிய பாங்கியில் வேலை பார்த்துவந்த லாலாராம் என்னும் வாலிபர் கதர் உடை அணிந்து சாட்சியம் கொடுக்க வந்தனர்.

என்ன சாதியைச் சார்ந்தவரென்று கேட்டபோது, அவர் தமக்கு சாதியில்லையென்று கூறி ‘யான் பிறப்பினால் அடிமை, நாட்டினால் இந்தியன்’ என்று அறிவித்தார்.

பப்ளிக் பிராசிகியூட்டர் சாட்சி தமது சாதியைச் சொல்ல மறுத்ததால், தாம் அவரை நீக்கப்போவதாகக் கூறினர்.

பகத்சிங்:—அவர் ஒரு அடிமை யல்லவென்பதை அறிவுறுத்துங்கள்.

பப்ளிக் பிராசிகியூட்டர்:— சுயேச்சையானவரே எனக்கு வேண்டும்; சாட்சியம் கூறும் பெட்டியில் குறைந்தது சுயேச்சை வாய்ந்த மனசாட்சி உடையவராக வாவது இருக்க வேண்டும். (நகைப்பு)

பகத்சிங்:—உங்கட்கு அத்தகையவர்கள் கிடைக்க மாட்டார்கள்.

பிரதிவாத வக்கீல் பிராஸிகியூட்டர் சாட்சிபெட்டியில் சாட்சிவந்த பிறகு நீக்குவது கூடாதென்று ஆட்சேபனை எழுப்பினர். அதனை மாஜிஸ்டிரேட் நிராகரித்தனர்.

அடுத்த சாட்சி திரு. சபூர்சிங் என்னும் போர்மென் நவஜீவன் பாரதசபா அறிக்கை யொன்றை ஒரு எதிரி தமது பிரஸில் பிரசுரித்ததாகவும், ஆனால் தம்மால் அவ்வெதிரியின் அடையாளத்தைக்கண்டுபிடிக்க முடியாதென்றும்கூறினர். பகத்சிங்கும்தத்தரும் இடைவேளை போஜனம் கொள்ளுமாறு கோர்ட்டு 15 நிமிடங்கள் தள்ளிவைக்கப்பட்டது.

கோர்ட்டு தொடங்கியதும் விஜயகுமாரசின்ஹா என்னும் எதிரி தங்களின் பெண் உறவினர்களும் நண்பர்களும் கோர்ட்டுக்குள் அநுமதிக்கப்படும் முன்பு மிகவும் தாழ்மையானதும் இழிவானதுமான நடவடிக்கைகட்கு உட்படுத்தப்படுகின்றனரென்று மாஜிஸ்டிரேட்டிற்கு புகார் செய்தனர். மாஜிஸ்டிரேட் நியாயமான வசதிகள் அளிப்பதாக வாக்களித்து வாசலிலுள்ள போலீஸ் அதிகாரிகளை அழைத்து சிலவற்றை அறிவுறுத்தினர்.

காங்கிரஸ் காரியதரிசி டாக்டர்கோபிசந் அடுத்தபடி சாட்சியம் கொடுக்கையில் யாஷ்பால் என்பவருக்கு வீடு கொடுக்கும்படி ஒரு வீட்டுச் சொந்தக்காரருக்குத் தாம் சிபார்சு செய்ததாகவும், யாஷ்பால் 1927 நவம்பர் மாதத்திலிருந்து 1928 ஜூன் அல்லது ஜூலை மாதம் வரையில் வசித்து வந்தனரென்றும் போலீசார் யாஷ்பாலின் வீட்டைப் பரிசோதனை செய்தனரென்று கேள்விப்பட்டதாகவும் கூறினர்.

நான்கு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட பிறகு இன்றைய விசாரணை முடிந்தது.

காங்கிரஸ் தொண்டர் கஷ்டம்

ஜாமீன் கட்ட மறுக்கிறார்

லாகூர், அக் 7

ஒரு பிரபல காங்கிரஸ் வாதியான மோஹனலால் கௌதமரை இன்று போலீசார் கி.பு.கோ 107வது செக்ஷன்படி குற்றம்சாட்டிக் கைது செய்தார்கள். ஒரு வருடம் நன்னடக்கைக்காக 10 ஆயிரம் ரூபாய் ரொக்க ஜாமினும் 10 ஆயிரம் ரூபாய்க்குஆள்ஜாமினும் கொடுக்க வேண்டுமென்று போலீசார் கேட்டனர். அவர் ஜாமின் கட்டமறுத்து போலீஸ் பந்தோபஸ்தில் இருக்கிறார்.

பீ பிரஸ்

வட்டமேஜை மகாநாடு

ராஜா சந்தோஷின் அபிப்பிராயம்

கல்கத்தா, அக், 7

வட்டமேஜை மகாநாடு சம்பந்தமாக ராஜா சந்தோஷை இங்கிலீஷ்மன் பத்திரிகை நிருபர் பேட்டிகண்டபோது அவர் தெரிவித்ததாவது:—அரசியல்பிரச்சினைகளைப்பற்றி நான் அபிப்பிராயம் கூற இயலாதவனாயிருக்கிறேன். ஜமீன்தார்களைக் கலந்தாலோசிக்காமல் பிரிட்டிஷ்மந்திரிசபை ஏதாவது முடிவுசெய்துவிடுவது ஆபத்தாகவே முடியும். கைத்தொழில் அபிவிருத்தியினால் இப்பொழுது ஒருபுதுமாதிரித்தலைவர்கள் தோன்றியிருக்கிறார்கள். ஆனால் ஜமீன்தார்களே ஜனங்களின் உண்மைத் தலைவர்கள். ஜமீன்தார்களிடம் பொதுஜனங்களுக்கு இப்பொழுது அவ்வளவு மதிப்பில்லையானாலும் ஆபத்துக்காலத்தில் அவர்கள் ஜமீன்தார்களைத் தலைவர்களாக ஒப்புக் கொள்ளாமல் இருக்க மாட்டார்கள்.

பீ பிரஸ்.

தந்தையைக்கொன்ற மகன்

தூக்குத் தண்டனை

திருநெல்வேலி, அக், 5

90 வயதுள்ள தன் தந்தையைக் கொலைசெய்ததாக சுவாமிநாதபிள்ளை மீது கொண்டுவரப்பட்டிருந்த வழக்கில் திருநெல்வேலி செஷன்ஸ் ஜட்ஜ் சுவாமிநாத பிள்ளைக்கு மரணதண்டனை விதித்தார்.

அ. பிரஸ்.

தென்னிந்தியப் பத்திரிகைத் தொழிலாளர் மகாநாடு

பெசவாடா, அக், 6

டிசம்பர் மாதத்தில் தென்னிந்திய பத்திரிகைத் தொழிலாளர் மகாநாடு கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அ. பிரஸ்.

அரசியல் கைதிகள் விழா

லாகூரில் கொண்டாட்டம்

லாகூர், அக், 7

நேத்திரவுநவஜவான் பாரத சபையின் ஆதரவில் லாலா ராமகிருஷ்ணன் தலைமையில் அரசியல் கைதிகள்விழா கொண்டாடப்பட்டது. மோர்தா சிங்கு அஜித்சிங்கு சாஜி அப்துர்ரஹமான் ஹக்கீம் சிக்கந்தர்தசிஜார்முதலியவர்கள் தண்டனைபெற்றதற்கு வாழ்த்துக் கூறி தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன. பீ பிரஸ்.

மீண்டும் வெடிகுண்டுவழக்கா?

காங்கிரஸ் தொண்டர் அவதி

கான் பகதூர் அப்துல் அஜீஸ் மீது வெடிகுண்டு போட அரசதியாலோசனைக் கூட்டம் முயற்சி செய்து வருவதாக அலிக்ஷா சி. ஐ. டி. அதிகாரிகள் புலன் விசாரித்து வருகிறார்கள் எனவகாட்டு காங்கிரஸ் தொண்டர் அமீர்சந்ததன்தலைவனர் சுப்பிண்ஸ்டன் ஓட்டல் சொந்தக்காரரோடு வசித்துவந்தார் ஓட்டலில் சாப்பிட்ட ஒரு உத்தியோகஸ்தர் பணக்குத் தீர்த்த பணம் கொடுக்க அழைப்பதாக ஒரு சாக்குச் சொல்லி சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் அமீர் சந்தை சில்லா போலீஸ் சூப்பரிண்டிடம் அழைத்துச் சென்று வெடிகுண்டு சதியாலோசனையைப்பற்றி ஏதாவது தெரியுமாவென்று கேட்டார். அவர் ஒன்றும் தெரியாதென்று கூறி மீண்டுமவரை கோலாக்மண்டி ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று விசாரணைசெய்தனர். நேற்றும் அவரை 10மணிக்கு அழைத்துக்கொண்டுபோய் 2-30 வரை ஸ்டேஷனில் நிறுத்தி வைத்திருந்தனர். இன்று 10 மணிக்கு வரும்படியாக அவரை எச்சரித்து அனுப்பி யிருப்பதாகத் தெரிகிறது.

பீ பிரஸ்.

காக்கோரி கைதிகளின் உண்ணாவிரதம்

இன்னும் சில விவரங்கள்

கான்பூர், அக், 6

காக்கோரி கைதிகள் உண்ணாவிரதம் நிறுத்தி விட்டதாக வெளிவந்த செய்தி உண்மை யல்லவென்று தெரிகிறது. உண்ணாவிரதமிருந்ததற்கு தண்டனையாக கைதிகளுக்குச் செய்துகொடுத்திருந்த வசதிகளையெல்லாம் சர்க்கார் ரத்துசெய்துவிட்டார்களாம். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மானப்படி உண்ணாவிரதத்தை நிறுத்தினால், அது சர்க்காரோடு ராஜி செய்ததாக மாட்டாதென்றும், உண்ணாவிரத விஷயமாக சர்க்கார் தம்மிஷ்டப்படி முடிவு செய்வார்கள் என்றும் சிறைச்சாலை அதிகாரிகள் கைதிகளுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே கைதிகள் உண்ணாவிரதமிருந்துவருகிறார்கள்.